1978 ஏப்ரல் 1]

Appointment of Scheduled Caste and Scheduled Tribe Persons.

*239 Q. THIRU D. V. D'MONTE: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of Scheduled Caste/Scheduled Tribe candidates who have registered their names in the District Employment Exchanges ; and

(b) the number of such candidates who have been provided with appointments through these Exchanges in the Central and State services during the last two years?

அரிசன மற்றும் பழங்குடி வகுப்பினருக்கு வேலை நியமனம்

திரு. டி. வி. டி'மாண்டி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) மாவட்ட வேலை வாய்ப்பகங்களில் பதிந்து கொண்டுள்ள அரிசன/பழங்குடி வகுப்பினர் எத்தனை பேர்?

(இ) கடந்த இரண்டாண்டுகளில், அவர்களில் எத்தனைபேர் இந்த வேலை வாய்ப்பகங்களின் மூலம் மத்திய மற்றும் மாநில அரசுப் பணிகளில் நியமனங்கள் பெற்றுள்ளனர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; (அ) 31-12-77 அன்றைய நிலவரப்படி உயிர்ப் பதிவேட்டில் காத்திருந்த தாழ்த்தப்பட்டவர்கள் 1,35,292 பேர்கள்; பழங்குடியினர் 2,234 பேர்கள்.

(இ) மத்திய மற்றும் மாநிலப் பணிகளில் அமர்த்தப் பட்டவர்கள் விவரம்:

		1976	1977
தாழ்த்தப்பட்டவர்கள்	..	4,742	2,714
பழங்குடியினர்	..	211	157

THIRU. D. V. D'MONTE: May I know whether, apart from the quota of appointments due to Scheduled Castes and Scheduled Tribes, these candidates are also being considered for appointment in the general pool, on merit? If so, may I have the details of such appointments, on merit, during the last two years?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட விகிதாச்சாரப்படி அவர்களுக்குப் பதவிகள் தருவதற்கான முயற்சிகளை

அரசு மேற்கொண்டிருக்கிறது. கேட்கப்பட்டிருந்த கேள்வி, 'open pool' லிருந்து தர முடியுமா என்பதுபற்றி. அப்படி கேள்வி எழ இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜார்ஜ் கோமகன்: வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்யும்போது, பல ஆண்டுகள் —10, 12 ஆண்டுகள் ஆகியும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காத காரணத்தால், அவர்கள் வயது வரம்பைக் கடந்து விடுகிறது. அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10·40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தப் பிரச்சினை எல்லா வகுப்பினருக்கும் பொதுவாக இருக்கக் கூடிய ஒன்று. வயது வரம்பைத் தளர்த்துகிற முயற்சியில் ஈடுபட்டால், இப்போது தேறி வருகிற இளைஞர்களுக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக்கூட வாய்ப்பைக் குறைக்கக் கூடியதாக இருக்கும். ஆகவே அதைப்பற்றி மேற்கொண்டு அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை.

திரு. க. அறிவழகன்: இந்தப் பழங்குடி மக்கள் தங்கள் சமுதாயத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிற காரணத்தால், புத்த மதத்தில் சேர வேண்டுமென்று டாக்டர் அம்பேத்கார் கூறியதன் காரணமாக புத்த மதத்தில் சேர்ந்திருக்கிறார்கள். திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் கூட புத்த மதத்தோடு இணைந்தவர்கள்தான். ஆகவே இந்த அரிஜனங்களுக்குத் தரப்படுகிற சலுகையை அவர்களுக்கும் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ் நாட்டில் அதைப் போன்ற வகுப்பார் இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஜார்ஜ் கோமகன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அரிசன கிருத்துவர்களாக உள்ள இந்தப் பழங்குடியினர் தமிழகத்திலே ஏராளமாக இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 10 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கும் வேலை வாய்ப்புத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது மத்திய அரசு எடுக்கவேண்டிய முடிவாகும். இது குறித்து மாநில அரசு தன்னுடைய சிபார்சைச் செய்திருக்கிறது என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

1978 ஏப்ரல் 1]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினு 235 ஒத்தி வைக்கப்படுகிறது. வினுக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்ட மன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள 1978 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/78) பிரதியை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்து ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிட்டது,

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 25ஆம் தேதி வந்திருக்கிறது. கொஞ்ச அவகாசம் கேட்டிருக்கிறுர்கள். பிறகு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, விதி 43ன் பிரகாரம் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். இன்றைய தினம் வருமென்று சொன்னுர்கள். அது ஒரு முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அது அவையின் முன்னவருக்குத் தரப்பட்டிருக்கிறது. விரைவில் எடுத்துக் கொள்ளப்படும். இன்றைக்கில்லை. தகவல் சேர்ந்த பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

3. அரசின் தீர்மானம்.

தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துதல் குறித்து.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது" என்று முன்மொழிகிறேன்.